**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்**

அசல் வழக்கு எண். 257/2015

நாள்: 30.09.2024

பெயர்: ராதாகிருஷ்ணன் (வா.சா.1) த/பெ: துரையப்பன்

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்

**6 முதல் 10 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை...**

1) எனக்கு படிக்க தெரியுமா என்றால் நான் எழுத்துக் கூட்டி தான் படிப்பேன். என் தந்தைக்கு 1) நான், 2) ராமசந்திரன், 3) மலர்கொடி, 4) கலையரசி ஆகியோர்கள் வாரிசுகள் ஆவோம். நான் தாக்கல் செய்துள்ள பிராதில் தாவா சொத்து எனக்கு வாய்மொழியாக பாகம் கிடைத்தது என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எந்த வருடம், எந்த மாதம் நாங்கள் வாய்மொழியாக பாகம் பிரித்துக்கொண்டோம் என்றால் சுமார் 10 வருடங்களுக்கு முன்பு பிரித்துக்கொண்டோம். மாதம் தெரியாது. வாய்மொழியாக பாகம் பிரித்த போது எங்கள் சகோதரிகளுக்கு பாகம் கொடுக்கப்பட்டதா என்றால் பாகம் கொடுக்கப்பட்டது. எந்த சகோதரிக்கு எந்த சர்வே எண்ணில் எவ்வளவு கொடுக்கப்பட்டது என்றால் மலர்கொடிக்கு 1/2 காணி கொடுக்கப்பட்டது, கலையரசிக்கு பாகம் எதுவும் கொடுக்கவில்லை.

2) நான் இந்நீதிமன்றத்தில் எந்த பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் தாவா சொத்தில் பிரதிவாதிகள் இடையூறு செய்யக்கூடாது என்பதற்காக தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ.1 என் தந்தை வாங்கிய கிரைய ஆவணத்தில் சர்வே எண்.67/1 என்று உள்ளது என்றால் சரிதான். அதேபோல் வா.சா.ஆ.1 சொத்து விபரத்தில் கீழ்மேல் காலடி 36, தென்வடல் காலடி 56 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1ல் கண்டுள்ள சொத்து தான் தாவா சொத்து என்றால் சரிதான். வா.சா.ஆ.1ல் கண்ட சொத்து எனக்கு எவ்வாறு கிடைத்து என்றால் சகோதரர், சகோதரிகள் எங்களுக்குள் பாகம் பிரிக்கப்பட்ட போது தாவா சொத்து என்னுடைய பாகமாக ஒதுக்கப்பட்டது. தாவா சொத்து எனக்கு வாய்மொழியாக பாகம் கிடைத்து அதை நான் அடைந்து அனுபவம் செய்து வருவதற்கான

ஆவணம் எதாவது இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை.

3) நான் தாக்கல் செய்துள்ள பிராதில் வழக்கு சொத்து விபரத்தில் பழைய சர்வே எண்.67/1 புதிய சர்வே எண்.67/27 என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். தாவா சர்வே எண்.67/1 தான் சர்வே எண்.67/27 ஆக மாறியதற்கான ஆவணங்கள் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. இரண்டும் ஒரே சொத்துதான் என்று காண்பிப்பதற்கான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1ன் படி என் தந்தை எவ்வளவு விஸ்தீரனம் கண்டு கிரையம் வாங்கினார் என்றால்  அதன் அடி கணக்கு தெரியும், மொத்த விஸ்தீரனம் எனக்கு தெரியாது. சர்வே எண்.67/27ன் மொத்த விஸ்தீரனம் 4.27 செண்ட் என்றால் எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் புலவரைபடத்தில் தாவா சொத்து சர்வே எண்.67/27 காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் புலவரைபடம் **பி.வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4) பி.வா.சா.ஆ.1ல் தாவா சொத்தின் கீழ்புறம் தென்வடலாக 18 மீட்டர் என்றும், மேல்புறம் 18.4 மீட்டர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். கீழ்மேல் வடபுறம் 9 மீட்டர், தென்புறம் 9.4 மீட்டர் என்றால் சரிதான். மேற்கண்ட அளவுகளின் படி சர்வே எண்.67/27ல் மொத்த விஸ்தீரனம் 4.19 செண்ட் என்றால் எனக்கு தெரியாது. தாவா சொத்திற்கு கீழ்புறம் பிள்ளையார்கோவில் உள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் செட்டில்மெண்ட் ரிஜிஸ்டரில் சர்வே எண்.67/1ல் நத்தம் என்று உள்ளது என்றால் சரிதான். செட்டில்மெண்ட் ரிஜிஸ்டர் **பி.வா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் அடங்கல் தான் சர்வே எண்.67/1க்கானது என்றால் சரிதான். அது **பி.வா.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதேபோல் அடங்கலில் சர்வே எண்.67/1 என்று தான் உள்ளது என்றால் சரிதான்.

5) என் தந்தை 2001 ஆம் ஆண்டு காலமானார். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.2ல் தாவா சொத்திற்கான சர்வே எண்ணோ அல்லது வா.சா.ஆ.2 தாவா சொத்துக்கு தான் செலுத்தியது என்பதை காட்டுவதற்கான ஆதாரம் இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.9 கிரைய ஆவணம் சிங்காரவேல் படையாட்சி பூராசாமி படையாட்சியிடமிருந்து கிரையம் பெற்ற ஆவணம் என்றால் சரிதான். வா.சா.ஆ.9ன் அடிப்படையில் தான் என் தந்தை சிங்காரவேல் படையாட்சியிடமிருந்து வா.சா.ஆ.1ன் படி கிரையம் வாங்கினார் என்றால் சரிதான். வா.சா.ஆ.9ல் சர்வே எண்.67/1 என்று தான் போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். தா.பழூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் கொடுக்கப்பட்ட உத்தரவு வா.சா.ஆ.4ன் படி எனக்கு இந்நாள் வரை வீடு வரி ரசீது கிடைக்கவில்லை என்றால் சரிதான். நான் தாவா சொத்திற்கு பட்டா கேட்டு மாவட்ட ஆட்சியரிடம் கொடுத்த மனு மற்றும் ஏற்பு சான்றிதழ் தான் வா.சா.ஆ.5 மற்றும் வா.சா.ஆ.6 என்றால் சரிதான். அதன்படி இந்நாள் வரை பட்டா வழங்கவில்லை என்றால் சரிதான். பிரதிவாதிகள் தடுத்தார்கள் அதனால் பட்டா வழங்கப்படவில்லை.

6) நான் மாவட்ட ஆட்சியரிடம் தாவா சொத்திற்கான வருவாய் ஆவணங்களை திருத்துவதற்கான கொடுக்கப்பட்ட மனு தான் வா.சா.ஆ.10 என்றால் சரிதான். அதன்படி தாவா சொத்தின் சர்வே எண் திருத்தப்படவில்லை என்றால் சரிதான். தாவா சொத்து நத்தம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்பதால் அதற்கு அடங்கல் உண்டு என்றால் சரிதான்.அது மனை என்று உள்ளது. தாவா சொத்திற்கான அடங்கல் என்பெயரில் இல்லை என்றால் சரிதான்.

**(6 முதல் 10 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணையின் தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.)**

ஒப்பம்/– திரு.S.கணேஷ், M.Com, M.L.,
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.